2-72

போர்த்துக்கேயரின் இலங்கை வருகை



ஞானமுத்து பிலேந்திரன்

போர்த்துக்கேயரின் இலங்கை வருகை

ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன்
B.Th. (Rome), M.Phil. (Jaffna), Ph.D. (Jaffna)
முதுநிலை விரிவுரையாளர்
தலைவர்/கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத் துறைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்
2009.

பதிப்பு விபரம்

நூல் : போர்த்துக்கேயரின் இலங்கை வருகை

ஆக்கம் : அருட்பணி ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன்

முதற்பதிப்பு : 1st ஒக்டோபர் 2008.

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்

விலை : ரூபா 40.00

அச்சகம் : ஜே. எஸ். அச்சகம்

Title : *Porthukkeyarin Ilankai Varukai*

Author : Rev. Fr. Gnanamuthu Victor Pilendran

First Published: 1st Oct. 2008

Copyright : Author

Printing : J.S.Priters.

ISBN : 978-955-96653-5-9

Publishers : Bishop's House, Jaffna.

Cover
The Church and Church House at Changane
From Phillipus Baldaeus'
Description of the Island of Ceylon, 1672.

போர்த்துக்கேயரின் இலங்கை வருகை

முன்னுரை

போர்த்துக்கேயரது இலங்கைக்கான வருகை தற்செயலாக இடம் பெற்ற ஒரு நிகழ்வாக அமைந்த போதும், இலங்கை வரலாற்றிலும், இலங்கைத் திருச்சபை வரலாற்றிலும், குறிப்பாக அரசியல், சமய, சமூக, கலாச்சார, பொருளாதார நிலைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அரசியற் பொருளாதார ஆக்கிரமிப்பே போர்த்துக்கேயரது வருகைக்கான முக்கிய தூண்டு விசைக்காரணிகளாக செயற்பட்டன என்பது பல வரலாற்று ஆசிரியர்களினால் தீர்க்கமான முடிவாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமியரும் போத்துக்கேயரும்

மிக நீண்ட காலங்களாக இஸ்லாமியர் கீழைத்தேசங்கள் பலவற்றுடனான வர்த்தக ஏகபோக உரிமையைத் தமதாக்கி, தங்கள் நாடுகளின் செல்வத்தையும், செழிப்பையும் வளர்த்துக் கொண்டனர். எட்டாம் நூற்றாண்டில் இஸ்லாமியரால் கைப்பற்றப்பட்டு, அண்ணளவாக எழுநூறு ஆண்டுகளுக்கு மேலாக இஸ்லாமியரது அடிமைகளாக்கப்பட்ட இஸ்பானியா, போர்த்துக்கால் ஆகிய நாடுகள் படிப்படியாக இஸ்லாமியரிடமிருந்து விடுதலையடைந்து கி.பி. 1095இல் தனியரசாகத் தோன்றின. போர்த்துக்கேயர் இஸ்லாமியரைத் தமது நாட்டிலிருந்து வெளியேற்றியது மட்டுமன்றி இஸ்லாமியரது வர்த்தக ஏகபோக உரிமையாக விளங்கிய நாடுகளையும் கைப்பற்றித் தமது வர்த்தக ஏகபோக நிலையங்களாக மாற்றிக்கொண்டனர். மேலும் போர்த்துக்கேயர் இஸ்லாமியரைத் தமது நாட்டிலிருந்து வெளியேற்றியது மட்டுமன்றி இஸ்லாமியரது வர்த்தக ஏகபோக உரிமையாக விளங்கிய நாடுகளையும் கைப்பற்றித் தமது வர்த்தக ஏகபோக நிலையங்களாக மாற்றிக்கொண்டனர். மேலும்

போர்த்துக்கேயர் இந்தியக்கடல் வழிப்பாதைகளைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொணர பல முயற்சிகளையும் மேற்கொண்டு பெருமளவு வெற்றியும் கண்டனர்.

கீழை நாடுகளுக்கு கடல்வழிப்பாதையைக் கண்டறியும் முயற்சியாக 8ஆம் திகதி ஆடி மாதம்[2] 1497இல் போர்த்துக்கால் மன்னனின் தூண்டுதலில் புறப்பட்ட வாஸ்கொடகாமா தலைமையிலான கடற்படையினர் 22ஆம் திகதி வைகாசி மாதம் 1498ஆம் ஆண்டு இந்தியாவில் கலிக்கட் (கள்ளிக்கோட்டை) என்னுமிடத்தை அடைந்தனர்.[3] இந்நிகழ்வு அராபிய இந்தியாவுடன் ஏற்படுத்தியிருந்த வாணிபத் தொடர்பிற்கும், அவர்கள் பெற்று வந்த வர்த்தக ஏகபோக இலாபங்களுக்கும் எச்சரிக்கையாக அமைந்தது. இவ்வருகை அராபியர் இந்தியாவுடன் கொண்டிருந்த வர்த்தக உறவுகள் படிப்படியாகத் துண்டிக்கப்பட வழிவகுத்தது.[4] மேலும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கடல்வழிப்பயணத்தைப் போர்த்துக்கால் தனது கட்டுப்பாட்டில் நிலைநாட்ட வாஸ்கொடகாமாவின் வருகை முழுமையாக வழிகோலியது எனலாம்.

கீழைத்தேச நாடுகளுக்கான கடல்வழிப்பாதைகளைத் தனது கட்டுப்பாட்டில் நிலைநிறுத்தியதோடு, இஸ்லாமியரின் ஆதிக்கத்தில் இருந்த கீழைத்தேச நாடுகளுடனான வர்த்தகத்தையும் தனது ஏகபோக உரிமையாக மாற்றிக் கொண்டது. போர்த்துக்கேயரது கீழைத்தேச படையெடுப்பிற்கான காரணங்களை நோக்கும் போது திரைகடலோடி தமது நாட்டிற்கு திரவியந் தேடி நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதும், ஆட்சி அதிகாரத்தை அகலப்படுத்தி தமது நாட்டின் புகழைப்பரப்புவதும், இஸ்லாமியருடைய வாணிபத்தைக் கட்டுப்படுத்தி கீழைத்தேச நாடுகளிலிருந்து இஸ்லாமியரை விரட்டி இந்நாடுகளுடனான வர்த்தக ஏகபோக உரிமையைத் தமதாக்கிக் கொள்வதுமாகும்.

மறுபக்கம் வாஸ்கொடகாமாவின் இந்திய வருகை ஐரோப்பிய, ஆசியத்தொடர்புகளுக்கும், ஆசிய நாடுகளின் பல்துறை மாற்றங்களுக்கும் வழிகோலியது எனலாம். இதன் விளைவாக போர்த்துக்கேய துணிச்சல் மிக்க வாணிபர்கள், படையினர், கடற்பயணிகள், ஆசிய நாடுகளுக்கு வருகைதரத் தொடங்கினர். போர்த்துக்கால் நாட்டைச்சார்ந்த மேற்குறிப்பிட்ட பிரிவினரே ஆசிய நாடுகளுடன் தொடர்பை ஏற்படுத்திய முதல் ஐரோப்பியர் ஆவர். இதனால் இவர்கள் ஐரோப்பிய பண்பாட்டின், கலாச்சாரத்தின் சிறந்த கூறுகளைப் பிரதிபலித்தார்கள் என்று கூறுவதற்கில்லை. எனினும் இவர்களது வருகையே ஆசிய

நாடுகளுக்கு கிறிஸ்தவம் அறிமுகம் பெறவும், பரம்பல் அடையவும் காரணமாக அமைந்தது. இவர்களது வருகையினால் ஆசிய நாடுகளின் அரசியல், சமய, சமூக, கலாச்சார நிலைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன என்பது வரலாறு கூறும் உண்மை. போர்த்துக்கேயரின் வருகையின் பின் தொடர்ந்த 450 ஆண்டுகளாக இந்தியா, இலங்கை ஆகிய நாடுகள் ஐரோப்பியரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன.

1498 இல் இந்தியா வந்த வாஸ்கொடகாமா 1499இல் பெருந்தொகை வாணிபப் பொருட்களுடன் போர்த்துக்கால் திரும்பினார்.[5] இதனைத் தொடர்ந்து பெரும் அமைப்பிலான படையெடுப்பும், கடற்பயணங்களும் போர்த்துக்கேயரால் ஒழுங்கு பண்ணப்பட்டன. 1500ஆம் ஆண்டு 13 போர்க்கப்பல்களுடனும், 1200 படையினருடனும் மேற்கொள்ளப்பட்ட இப்படையெடுப்பிற்கு Pedro Alvarez Cabral என்பவர் பொறுப்பு வகித்தார்.[6] இவர்கள் இந்தியாவில் கலிக்கட் என்னும் இடத்தை அடைந்து சாமேரினுடன்[7] வாணிபத் தொடர்புகளை ஏற்படுத்த முற்பட்ட போதும், கலிக்கட் மன்னன் அராபியருடன் தாம் ஏற்கனவே கொண்டிருந்த வாணிபத் தொடர்புகளை துண்டிக்க விரும்பவில்லை. இதனால் போர்த்துக்கேயர் கொச்சின் துறையை அடைந்து அங்குள்ள மன்னனுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, அங்கேயே தமது செயற்களமையத்தையும் அமைத்து இயற்கை வளங்களைக் கொண்ட அங்குள்ள துறைமுகத்தை தமது தேவைக்குப் பயன்படுத்தினர்.[8]

கீழைத் தேயங்களுடனான வாணிபத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த போர்த்துக்கேய மன்னன் டொம் மனுவல்[9] (1495-1521), இந்தியக் குடியேற்றங்களுக்குப் பதில் ஆளுனராக டொன் பிரான்சிஸ்கோ டீ அல்மெய்டா[10] (1505-1509) என்பவனை நியமித்தான். பிரான்சிஸ்கோவின் கொள்கையின் படி சிறிய நாடாகிய போர்த்துக்கால் கீழைத்தேசங்களில் ஆட்சியமைப்பதிலும் மேலாக வலிமைமிக்க கடற்படையுடன் சில கடற்படைத்தளங்களையும், குடியேற்றங்களையும் நிறுவி இந்து சமுத்திர கடற் பிராந்தியத்தைக் கட்டுப்படுத்துவதையே ஏற்ற முறையெனக் கருத்திச் செயற்பட்டன. இதனால் இலங்கை, பர்மா, மலாக்கா போன்ற இடங்களுக்குச் சென்று இவ்விடயங்களின் மன்னர்களுடன் வாணிபத் தொடர்புகளை ஏற்படுத்துமாறு பிரான்சிஸ்கோ டீ அல்மெய்டா தமது படையினரைப் பணித்தார்.

கோவா செயற்கள மையம்

ஆளுநர் பிரான்சிஸ்கோ டீ அல்மெய்டா என்பவரைத் தொடர்ந்து Alfonso de Albuquerque அல்பொன்சோ டீ அல்பேகுவேர்கு (1509-515)என்பவன் இந்திய ஆளுனராக போர்த்துக்கால் மன்னனால் நியமிக்க பெற்றான். இவன் இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் கைப்பற்றி அங்கு போர்த்துக்கால் படையினரின் நிலைகளை உறுதிப்படுத்தினான். இந்தியாவில் (Diu)[11] கோவா, கொச்சின் என்னுமிடங்களில் தமது செயற்களமையங்களை அமைத்தான். ஆனால் இஸ்லாமியர் முன்னதாகவே தமது செயற்பாட்டின் மையத்தளத்தைக் கோவாவில் அமைத்திருந்தனர். இந்தியாவிலிருந்து போர்த்துக்கேயரை வெளியேற்றுவதற்கு கோவா கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமென இஸ்லாமியர் கருதினர். ஆனால், 1510இல் போர்த்துக்கேய ஆளுனன் அல்பொன்சோ டீ அல்பேகுவேர்கு கோவாவில் நிலை கொண்டிருந்த இஸ்லாமியத்தளங்களைத் தாக்கி, அவற்றைக் கைப்பற்றி தனது செயற்களமையத்தைக் கோவாவில் அமைத்தான்.[12]

போர்த்துக்கேயரின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் கோவா பொருத்தமான அமைவிடமாக விளங்கியது. மேலும் கோவா ஒரு தீவாக இருந்ததினால் அதைக்காப்பது போர்த்துக்கேயருக்கு இலகுவாக இருந்தது. இவர்களது கடற்கலங்கள் தங்கு தடையின்றி இத்தீவை அடைவதற்கும் அங்கிருந்து வெளியேறுவதற்கும் சிக்கல்கள் இருக்கவில்லை. இதன் அமைவிடமாக ஒரு பக்கத்தில் Bijapur என்னும் இஸ்லாமிய மாநிலமும், மறுபக்கத்தில் இந்து மாநிலமான விஜய நகரும் உள்ளன. இதனால் போர்த்துக்கேயர் விஜயநகர மன்னனுடன் வாணிப உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு சாதகமான நிலமை இங்கு நிலவியதெனலாம். கோவாவிலும், ஏனைய போர்த்துக்கேய குடியேற்ற நாடுகளிலும் போர்த்துக்கேய சுதேசிகளுடன் கலந்து, உள்நாட்டுப் பெண்களைத் திருமணம் செய்து, இந்நாடுகளில் போர்த்துக்கேயருக்கு எந்தவேளையிலும் பிரமாணிக்கமாக இருக்கும், உள்நாட்டிலேயே நிரந்தரமாக வாழும் மக்கள் கூட்டத்தை உருவாக்கினார்.[13]

இந்து சமுத்திரப் பிராந்தியத்தினின்று அராபியர்களைத் தோற்கடித்து வெளியேற்றுவதற்கும், தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கும் போர்த்துக்கேயரிடம் காணப்பட்ட கொள்கை உறுதியும், மன வலிமையும், படைப்பலமும், ஆயுதப்பலமும், கடற்கலங்களும், கத்தோலிக்கத் திருச்சபையின்

அதிகாரிகளிடமிருந்து கிடைத்த ஆதரவும், ஊக்குவிப்பும் முக்கிய காரணிகளாக விளங்கின.

போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்பு இந்து சமுத்திரத்திலுள்ள நாடுகளின் வாணிபத்தைத் தமது வர்த்தக ஏகபோக உரிமையாகக் கொண்டிருந்த இஸ்லாமியர் மலாக்கா, சுமாத்திரா, ஆகிய நாடுகளிலிருந்து வாணிபப் பொருட்களை தமிழ்நாட்டுக் கரையோரம் வழியாக எடுத்துச்சென்று செங்கடலை அடைந்தனர்.[14] போர்த்துக்கேயர் இந்தியக்கரையோரங்களைக் கைப்பற்றிய பின்பு இஸ்லாமியர் தங்கள் வளமையான கடல்வழிப் பயணங்களை மாற்றி மாலை தீவைச்சுற்றி தங்கள் பயணங்களை மேற்கொண்டனர். வாணிபக் கப்பல்களைத்தாக்கி அவற்றிலுள்ள பொருட்களைக் சூறையாடுவது இக்காலங்களில் கடலில் அடிக்கடி இடம் பெறும் ஒரு நிகழ்வு என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது.

இவ்வாறு மலாக்கா, சுமாத்திரா நாடுகளினின்று வாணிபப் பொருட்களுடன் வரும் இஸ்லாமியரின் கப்பல்களைத் தடுத்து நிறுத்தித் தாக்குவதற்கும், சூறையாடுவதற்கும் இந்திய ஆளுனராகப்பணியாற்றிய டொன் பிரான்சிஸ்கோ டீ அல்மெய்டாவின் மகன் லொறன்ஸோ டீ அல்மெய்டா என்பவர் ஒன்பது கப்பல்கள் கொண்ட படையுடன் கொச்சியிலிருந்து அனுப்பப்பட்டார்.[15] இப்படையின் ஆன்ம குருவாக பிரான்சிஸ்கன் சபையைச் சார்ந்த பிறே விசன்றி அடிகள் இவர்களுடன் சென்றார்.[16] இவர்கள் சென்ற கப்பல்கள் கடும் புயலில் சிக்கி கடலினாலும், காற்றினாலும் அள்ளிச் செல்லப்பட்டது. இந்நிலையில் படைத்தலைவன் லொறன்ஸோ டீ அல்மெய்டா பயணத்தைக் கைவிட்டு இந்தியா திரும்புவது பற்றி எண்ணினார்.

இக்கட்டத்தில் ஆன்ம குருவிடம் ஆலோசனை கேட்டபோது கப்பல்களைக் கடலுடனும், காற்றுடனும் அடையவிடும்படி ஆலோசனை கூறினார்.[17] கப்பல்கள் காற்றினால் அள்ளிச்செல்லப்பட்டு இலங்கையின் தென்மேற்குப் பகுதியான காலி என்னும் இடத்தின் கரையை நங்கூரமிட்டு, அங்கிருந்து கரைவழிப்பயணம் செய்து 1505ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தை அடைந்தனர்.[18] காலிக்கரையை அடைந்த பின்பே போர்த்துக்கேயப் படையினர் தாம் இலங்கையை அடைந்ததைத் தெரிந்து கொண்டனர்.

போர்த்துக்கேயர் முதன்முதல் இலங்கைக்கு வருகை தந்தபோது 9ஆம் தர்மபராக்கிரமபாகு மன்னன் (1483-1513) கோட்டை அரசை ஆண்டான்.[19] கொழும்புத்துறைமுகம் கோட்டை

மன்னனுடன் இடம்பெற்ற வாணிபக் கப்பல்களுக்கு முக்கிய துறையாக விளங்கியது. கறுவா, தேங்காய், யானை, இரத்தினக்கல் என்பன கோட்டையின் முக்கிய வாணிப்ப பொருட்களாக விளங்கிய வேளையில், இவ்வாணிபம் அராபியரின் ஏகபோக உரிமையாகவும் காணப்பட்டது. கொழும்பு நகர்ப்பகுதியிலே பெரும் தொகையான இஸ்லாமியர் வாழ்ந்ததோடு, பெரிய பள்ளிவாசல், சேமக்காலை, நீதிமன்று என்பவற்றுடன், இஸ்லாமியரால் அவர் தம் வாணிபத் தேவையின் பொருட்டு அமைக்கப்பட்ட பெரும் களஞ்சியசாலையும் காணப்பட்டது.[20] கொழும்பில் அனைத்து வசதிகளுடனும் வாழ்ந்து வந்தனர் என்பதை அறியக்கூடியதாயுள்ளது.

போர்த்துக்கேயர் கொழும்புத்துறைமுகத்தை அடைந்தமை தங்கள் எதிரிகளின் வரவைச் சற்றும் எதிர்பாராத இசுலாமியருக்குப் பெரும் எச்சரிக்கையாக அமைந்தது. எனினும் போர்த்துக்கேயப் படைத்தலைவன் லொறன்ஸோ டி அல்மெய்டா மிகவும் நிதானத்துடன் இசுலாமியரைப் பகைக்காத முறையில் நடந்து கொண்டான். கோட்டை மன்னனுடன் தொடர்பு கொள்ள விரும்பிய போர்த்துக்கேயருக்கு இஸ்லாமியா் கோட்டை மன்னனின் இருப்பிடம் தொடர்பான தகவல்களை அளிக்க மறுத்துவிட்டனர். எனினும், போர்த்துக்கேயரின் வருகை கோட்டை மன்னன் 9ஆம் தர்ம பராக்கிரமபாகுவிற்கு அறிவிக்கப்பட்டது. போர்த்துக்கேயர் பற்றி கீழ்க்கண்டவாறு மன்னனுக்கு விபரிக்கப்பட்டது. "கொழும்புத்துறைமுகத்தில் வெள்ளை நிறத்தோலைக் கொண்ட அழகான மனிதர்கள் காணப்படுகின்றார்கள். இவர்கள் இரும்பினாலான மார்புக்கவசமும், இரும்பினாலான தலைப்பாகையும் அணிந்து எந்த வேளையும் அங்கும் இங்குமாக நடந்து மிகவும் சுறுசுறுப்பாகவும், வேகமாகவும் செயற்படுகின்றார்கள். சிறுசிறு கற்றுண்டுகளை உண்டு(பாண்), இரத்தத்தைக் (இரத்தம்) குடிக்கின்றார்கள். அவர்கள் பீரங்கிகள் எழுப்பும் முழக்கம், இடிமுழக்கத்தை விட அதிகம் சத்தமாயுள்ளது".[21]

கோட்டை மன்னன் தமது ஆலோசனைச் சபையைக் கூட்டி அதன் அறிவுரைப்படி போர்த்துக்கேயரை வரவேற்பதற்கு தன் தூதுவர்களை அனுப்பினான். ஆலோசனைச் சபையின் தீர்மானம் லொறன்ஸோ டி அல்மெய்டாவிற்கு பெரும் மகிழ்ச்சியை அளித்தது. தனது கடற்படைகளின் ஒரு கப்பலின் தலைவனான (Fernao Cutrim) பெனாவோ குட்றிம் என்பவனைக் கோட்டை மன்னனிடம் தனது தூதவனாக அனுப்பினான். தூதுவன் கோட்டை மன்னனுக்கு லொறன்ஸோ டி அல்மெய்டாவின்

வாழ்த்துச் செய்தியைக் கூறி கோட்டை மன்னனுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தமது தரப்பின் விருப்பத்தைத் தெரிவித்தான். பெனாவோ குட்றிம் கோட்டை மன்னனை நேரிற் கண்டு பேசாதவிடத்தும், போர்த்துக்கேயரின் வேண்டுகோளுக்கு மன்னன் இணங்கினான்.

முதல் ஒப்பந்தம் கைச்சாத்து

(Payo de Souza) பேயோ டீ சொய்சா என்பவனை லொறன்ஸோ டீ அல்மெய்டா தனது பிரதிநிதியாக கோட்டை மன்னனிடம் ஒப்பந்தப் பேச்சிற்கு அனுப்பினான். போர்த்துக்கேயர் கோட்டை மன்னனுடன் வாணிப ஒப்பந்தத்தை ஏகபோக உரிமையாகச் செய்துகொள்ள விரும்பினர். கோட்டை மன்னன் போர்த்துக்கேயருக்கு ஆண்டுதோறும் திறையாக 300 Lahars[22] கறுவா கொடுப்பதாகவும், இதற்குப் பதிலாக போர்த்துக்கேயர் கோட்டை மன்னனின் துறைமுகங்களை எதிரிகளிடமிருந்து காக்கவேண்டும் எனவும் இணக்கம் காணப்பட்டது. இவ் இணக்கப்பாட்டின் அடிப்படையில் கோட்டை மன்னனுக்கும் போர்த்துக்கேயருக்குமிடையே நட்புறவுக்கும், வர்த்தகத்திற்குமான ஒப்பந்தம் போர்த்துக்கேயம், சிங்களம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டு கைச்சாத்திடப்பட்டது.[23]

போர்த்துக்கேயர் தமது இலங்கைக்கான வருகையின் நினைவுச் சின்னமாகவும் எதிர்கால உறவுகளை வளர்ப்பதையும் நோக்காகக் கொண்டு கோட்டை மன்னனின் அனுமதியுடன் துறை முகத்துக்கண்மையில் ஒரு சிற்றாலயத்தை அமைத்தனர். இவ்வாலயம் படைத்தலைவன் லொறன்ஸோ டீ அல்மெய்டாவின் பாதுகாவலரான புனித லோறன்ஸ் பெயருக்கு அர்ப்பணிக்கப்பட்டது.[24] இவ்வாலயத்திற்கு அருகாமையில் ஒரு களஞ்சிய சாலையும் அமைக்கப்பட்டது. ஆன்மகுரு பிறே விசன்ரி அடிகள் (Latin) இலத்தீன் மரபிலான திருப்பலியை இலங்கையில் முதன் முதல் ஒப்புக்கொடுத்தார். இதுவே இலங்கைத் திருச்சபையின் வரலாற்றின் ஆரம்பம் என சில வரலாற்று ஆசிரியர்கள் கணிக்கின்றார்கள். போர்த்துக்கேயர் தமது இலங்கைக்கான வருகையின் நினைவுச் சின்னமாக துறைமுகத்திலுள்ள ஒரு பாறையில் தமது நாட்டின் இலச்சியச் சின்னத்தைச் செதுக்கினர்.[25]

படையினரின் ஆன்ம குரு விசன்ரி இலங்கையிலேயே தங்கி மறைபரப்புப் பணியை மேற்கொள்ள விரும்பினாலும், கோட்டை மன்னனுடன் உரிய நட்பை ஏற்படுத்துவதற்கு முன்பு

மதுப்பிரச்சாரம் செய்வது எதிர்காலத் திட்டங்களைப் பாதிக்கலாம் எனக்கருதி போர்த்துக்கேய சிவில் அதிகாரிகள் மதுப்பிரச்சாரத்தைத் தடுத்தனர்.[26]

போர்த்துக்கேயர் எதிர்காலத்தில் தமது வாணிபத்தையும், நட்பையும் பலப்படுத்தும் நோக்குடன் சில படையினரை இலங்கையில் விட்டுச் சென்றனர். லோறன்ஸ் டீ அல்மெய்டா, ஆன்மகுரு பிறே விசன்ரி, ஏனைய போர்த்துக்கேயப்படையினர் கொச்சின் திரும்பி ஆளுனர் பிரான்சிஸ்கோ அல்மெய்டாவிடம் இலங்கை பயணம், ஒப்பந்தம் தொடர்பான அனைத்து விடயங்களையும் எடுத்துரைத்தனர். போர்த்துக்கேயர் இலங்கை அடைந்தமை குறித்துப் பல சமய நன்றி வழிபாடுகளும், சமூக கொண்டாட்டங்களும் கொச்சியிலும், போர்த்துக்காலிலும் இடம் பெற்றன. இச் செய்தியைப் போர்த்துக்கால் மன்னன் டொம் மனுவல் 1, திருத்தந்தை 2ஆம் யூலியஸ்[27] என்பவருக்கு 25ஆம் திகதி புரட்டாதி மாதம் 1507 ஆம் ஆண்டு எழுதிய மடல் வழியாக அறிவித்தான்.[28]

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகைதந்து, கோட்டை மன்னனுடன் ஒப்பந்தம் செய்து கொழும்புத்துறைமுகத்தில் ஆயுதப்பாதுகாப்புடனான களஞ்சியசாலையை அமைத்தமை இசுலாமியர் ஏற்கனவே போர்த்துக்கேயர் மீது கொண்டுள்ள வெறுப்பையும் சினத்தையும் அதிகரித்து, போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்படும்படி மன்னனையும் மக்களையும் இசுலாமியர் தூண்டினர். இதனால் போர்த்துக்கேயர் கோட்டை அரசில் நிலை கொள்வது கடினமாயிற்று. இப்பின் புலத்திலேயே இந்தியாவிலுள்ள போர்த்துக்கேய ஆளுனரின் பணிப்பில் கொழும்பிலுள்ள போர்த்துக்கேயரின் களஞ்சியசாலை போர்த்துக்கேயராலேயே அழிக்கப்பட்டு இலங்கையில் தங்கவிடப்பட்ட படையினரும் மீண்டும் இந்தியாவிற்கு அழைக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து 1518ஆம் ஆண்டுவரை போர்த்துக்கேயக்குருக்கள் எவரும் இலங்கைக்கு வந்தமைக்கோ, அல்லது இலங்கையில் மறைப்பணியாற்றியமைக்கோ எந்தவித சான்றும் கிடைத்தில. எனினும் இந்தியாவிலுள்ள போர்த்துக்கேய ஆளுனன் வருடாவருடம் புரட்டாதி மாதத்தில் தனது படையினரை அனுப்பி கோட்டை மன்னனிடம் திறை பெற்று வந்துள்ளான்.

போர்த்துக்கால் மன்னன் டொம் மனுவல் இந்தியாவின் 3ஆம் ஆளுனனாக லோப்போ சுவாறஸ் டீ அல்பெக்காரியா என்பவனை நியமித்தான். இந்து சமுத்திரத்தில் இலங்கையின்

கேந்திர முக்கியத்துவத்தை உணர்ந்த போர்த்துக்கால் மன்னன் 1515 இல் கொழும்பில் ஒரு நிரந்தரமான கோட்டையை அமைக்கும்படி தனது இந்திய ஆளுனனைப் பணித்தான். 1517 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 10ஆம் திகதி லோப்போ சுவாறஸ் டீ அல்பேக்காரியா என்பவன் களஞ்சிய கட்டுமானப்பணிக்கான உபகரணங்களுடனும், 17 கடற்கலங்களுடனும், 850 படை வீரருடனும் இலங்கைக்கான தனது பயணத்தை ஆரம்பித்தான்.

போர்த்துக்கேயர் கோட்டை அமைக்கும் பணியில் இஸ்லாமியரதும், இஸ்லாமியரால் தூண்டப்பெற்ற மக்களினதும் எதிர்ப்புக்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. பல எதிர்ப்புக்கள் மத்தியிலும் போர்த்துக்கேயர் கொழும்பில் ஒரு கோட்டையை நிறுவி கோட்டை மன்னன் 9ஆம் தர்மபராக்கிரமபாகுவுடன் முதவில் செய்து கொண்ட ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொண்டனர். இதன்படி வருடாவருடம் கோட்டை மன்னன் போர்த்துக்கேயருக்கு 300 டுயாயசள கறுவாயும், மாணிக்கக்கற்கள் பதித்த 20 மோதிரங்களையும், 10 யானைகளையும் திறையாக வழங்குவதெனவும், போர்த்துக்கேயர் கோட்டை மன்னனின் துறைமுகங்களை எதிரியின் தாக்குதல்களில் நின்று காக்க வேண்டுமெனவும் உடன்பாடு காணப்பட்டது.

1517 ஆம் ஆண்டு கோட்டை மன்னனின் அரண்மனையில் எழுபது போர்த்துக்கேயர்கள் ஆயுதங்கள் அற்றவர்களாகவே இருந்ததாக அறியப்படுகின்றது. இவர்களில் பலர் சுகவீனர்களாகவும், வயது முதிர்ந்தவர்களாகவும் காணப்பட்டனர். 1518 ஆம் ஆண்டிலிருந்தே போர்த்துக்கேயப்படை வீரரினதும், அதிகாரிகளினதும் ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்ய பிரான்சிஸ்கன் சபைக்குரு ஒருவர் இலங்கையில் நிரந்தரமாகத் தங்கியிருந்து பணியாற்றினார். இவர் சுதேசிகள் மத்தியிலும் சிறிய அளவிலான மதமாற்றப்பணியில் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கோட்டையில் கிறிஸ்தவம் பரப்பப்படவேண்டும் என்பது பற்றி போர்த்துக்கால் மன்னன் டொம் மனுவல் உறுதியாக இருந்தான் என்பதை 5ஆம் திகதி பங்குனி மாதம் 1521 ஆம் ஆண்டு போர்த்துக்கால் மன்னன் இலங்கையிலுள்ள போர்த்துக்கேயரின் தலைவனுக்கு எழுதிய மடலில் இருந்து அறியக்கூடியதாயுள்ளது. இம் மடல் வழியாக இலங்கையில் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கும், பரம்பலுக்கும் மிகப்பயனுள்ள சில அறிவுறுத்தல்களை வழங்கினான். கிறிஸ்தவ மறையைப்பரப்புவதற்கு போர்த்துக்கேய அதிகாரிகளும், படையினரும் தம்மாலான அனைத்து

முயற்சிகளையும் செய்ய வேண்டுமென்வும், கிறிஸ்தவ மறையைத் தழுவுகின்றவர்கள் மதிக்கப்பட்டு, சலுகைகள் வழங்கப்பட்டு, நல்லமுறையில் நடத்தப்பட வேண்டுமென்வும், சிறுபிள்ளைகளுக்கு மறை அறிவு அழிக்கப்பட வேண்டுமெனவும், ஆலய வழிபாடுகள் சிறந்த முறையில் இடம் பெற வேண்டுமெனவும், நோயாளிகள் நன்கு பராமரிக்கப்படுவதோடு, ஏழைகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுக் கவனிக்கப்பட வேண்டுமெனவும் பல பயனுள்ள ஆலோசனைகளையும், ஊக்குவிப்பையும் வழங்கினான்.

போர்த்துக்கேயர் முதன்முதல் இலங்கையை அடைந்த போது இலங்கை முழுவதும் கோட்டை, யாழ்ப்பாணம், கண்டி என மூன்று தனி அரசுகளாகப் பிரிக்கப்பட்டு, மூன்று அரசர்களால் ஆளப்பட்டு வந்தது, கோட்டை அரசு செல்வச் செழிப்புள்ளதாகவும், பரப்பளவில் பெரிதாகவும், அதிக அதிகாரப்பலம் கொண்டதாகவும் விளங்கியது.[29] இவை தென்மேற்குக்கரையோரப் பகுதியை உள்ளடக்கியதாக சிங்களக்கோட்டை அரசம், மத்திய மலைநாட்டுப் பகுதியை உள்ளடக்கிதாக சிங்கள கண்டி அரசும், வட பகுதியை உள்ளடக்கியதாக யாழ்ப்பாணத்தமிழ் அரசும் என அமைந்திருந்தன. போர்த்துக்கேயர் கோட்டை மன்னனுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு முன்பே இஸ்லாமியர் கோட்டை மன்னனுடன் ஏகபோக வாணிபத் தொடர்பை ஏற்படுத்தியதுடன், கொழும்பில் குடியேற்றத்தையும் கொண்டிருந்தனர்.[30] இதனால் போர்த்துக்கேயருக்கு எதிராக மக்களையும் மன்னனையும் கிளர்ச்சி செய்யத்தூண்டினர்.

இஸ்லாமியர் எதிர்ப்பினால் போர்த்துக்கேயர் பல அறைகூவல்களை எதிர் கொள்ள வேண்டியிருந்தாலும் படிப்படியாக தங்கள் அதிகாரத்தை கோட்டை அரசில் நிலைநாட்டியதோடு, கோட்டை மன்னனுடன்[31] ஒப்பந்தம்[32] செய்து தேவைக்கேற்ப அதைப்புதுப்பித்துக் கொண்டனர். போர்த்துக்கேயர் கோட்டை அரசின் அரசியலில் தலையிடாது தமது வாணிபத்தைப் பலப்படுத்துவதிலும், இஸ்லாமியரின் வாணிபத்தைத்தடை செய்வதிலுமே முனைப்புடன் செயற்பட்டனர்.

எனினும், 1518 இல் போர்த்துக்கேயர் கொழும்பில் ஒரு கோட்டையைக் கட்டியமை[33] பல தரப்பிலும் பலவிதமான ஊகங்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் இடமளித்தது. மேலும் 1519 இல் போர்த்துக்கேயர் எழுபதிற்கும் அதிகமான சிங்களவர்கள் கிறிஸ்தவத்தை ஏற்கவும், தங்கள் குடியேற்றங்களில்

குடியிருக்கவும் வற்புறுத்தியபோது முறுகல் நிலை மேலும் அதிகரித்தது.[34] 1518-1521 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் போர்த்துக்கேயர் கட்டிய கோட்டை மீது தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.[35]

போர்த்துக்கேயர் கொழும்பில் கோட்டை நிறுவியமையும், படையை நிறுத்தியமையும் சுதேசிகளின் வெறுப்பிற்கும், அரசில் பெரும் குழப்பங்களுக்கும், கொந்தளிப்பிற்கும் காரணமாக அமைந்ததால் 1524 இல் போர்த்துக்கேயர் கோட்டையை இடித்து,[36] 20 படையினரைக் கொண்ட சிறு குழுவைத்தவிர ஏனையோரை மீண்டும் இந்தியாவுக்கு அழைத்துக் கொண்டனர்.

ஆனால் ஐப்பசி மாதம் 1521 ஆம் ஆண்டு அரசமாளிகையில் ஏற்பட்ட திடீர்ப்புரட்சி கோட்டை அரசின் அரசியல் விவகாரத்தில் போர்த்துக்கேயர் தலையிட வழிவகுத்ததோடு, அரசியல் நிலையில் பாரிய தாக்கத்தையும் ஏற்படுத்தியது.[37] 9ஆம் தர்ம பராக்கிரமபாகுவின் மரணத்தையடுத்து அவன் மகன் விஜயபாகு என (1513-1521) கோட்டை அரசின் மன்னனாக ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டான். தமது தந்தையை நஞ்சூட்டிக் கொலை செய்ததாகக் கூறப்படும் இவனது ஆட்சி அதிக காலம் நீடிக்கவில்லை.

விஜயபாகு தனக்குப்பின் கோட்டை அரசின் ஆட்சி அதிகாரத்தை முறைப்படி வாரிசுகளான தனது மூன்று ஆண் மக்களையும் தவிர்த்து தனது சுவிகார மனைவியின் மகனுக்கே அளிக்க திட்டம் கொண்டான். இதனால் தந்தையின் மீது வெறுப்பும், கோபமும் கொண்ட இளவரசர்கள் கண்டி அரசின் உதவியை நாடி அவன் வழங்கிய படையுடன் தந்தை விஜயபாகுவிற்கு எதிராகப்போர் தொடுத்தனர். இப்போரில் கோட்டை மன்னன் விஜயபாகுவின் படையின் ஒரு தொகுதியினர் இளவரசர்கள் படையுடன் இணைந்து கொண்டனர். இப்போரில் விஜயபாகு தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். கோட்டை அரசு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மூன்று இளவரசர்களுக்கிடையே பகிரப்பட்டது. கோட்டைப்பகுதி மூத்த மகனாகிய புவனேகபாகுவிற்கும், கண்டிப்பகுதியை அண்டிய சீதவாக்கை மாயாதுண்ணவுக்கும், றைகம பகுதி மத்தும பண்டார என்னும் பரராஜசிங்கவுக்கும் என மூன்று இளவரசர்களுக்கும் வழங்குவதென கண்டி அரசனாலும், கோட்டை அரசைச்சேர்ந்த பெரியோர்களாலும் கூட்டப்பட்ட மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.[38]

போர்த்துக்கேயர் கோட்டை அரசின் அரசியலில் மேலும் தலையிட 1521இல் இடம் பெற்ற இச்சம்பவம் மேலும் வழிவகுத்தது.

மாயாதுண்ண ஆட்சி அதிகாரத்திற்கு அளவுக்கதிகமான அவாவுள்ளவனாகவும், வலியத்தாக்கும் குண இயல்பைக் கொண்டவனாகவும் விளங்கினான். அவனது இடண்டாம் சகோதரன் மத்தும பண்டார இறந்த போது 1538 இல் றைகம பகுதியையும் தனது ஆட்சிப் பகுதியான சீதவாக்கையுடன் இணைத்துக் கொண்டான்.[39] இவனது இயல்பிற்கு எதிர்மாறானதாக இவனது சகோதரன் புவனேகபாகு அமைதியை விரும்புபவனாகவும், எளிதில் அஞ்சும் குண இயல்புள்ளவனாகவும் காணப்பட்டான். இவன் தனது முப்பது வருட ஆட்சிக்காலத்திலும் அமைதி குறைவற்ற நிலையில் பல சவால்களை எதிர்நோக்கினான்.

கோட்டைப் பகுதியில் போர்த்துக்கேயரின் ஆதிக்கம் அதிகரிப்பதை மாயாதுண்ண சற்றேனும் விரும்பவில்லை. மேலும் இளம் வயதினன் ஆகிய இவன், அதிகார மோகத்தினால் உந்தப்பட்டு கோட்டை அரசு முழுமையையும் தனது ஆட்சியின் கீழ் கொணர வேண்டும் என்னும் எதிர்பார்ப்புடனும் செயற்பட்டான். மாயாதுண்ண 1527, 1528, 1538 ஆகிய ஆண்டுகளில் தென் இந்தியா கலிக்கட் சாமோரின் வழங்கிய படைத்துணையுடனும், உள்நாட்டிலுள்ளள இசுலாமியர் வழங்கிய உதவியுடனும் கோட்டை அரசைக் கைப்பற்றுவதற்கு மிகத்தீவிரமாக முயற்சித்தான்.[40] இந்நிலையில் புவனேகபாகு கொழும்பில் நிலைகொண்டிருந்த போர்த்துக்கேயரினதும், அவர்கள் வழி கோவாவிலுள்ள போர்த்துக்கேய ஆளுனரிடமிருந்தும் படை உதவிபெற்று மாயாதுண்ணவையும் அவனது கூட்டுப்படைகளையும் தோற்கடித்தான்.[41]

புவனேகபாகு வயதில் முதிர்ந்த காரணத்தினாலும், அவனுக்குப் பின் ஆட்சிப்பொறுப்பை ஏற்பதற்கு அவனுக்கு ஆண்மக்கள் இல்லாத காரணத்தினாலும், தனக்குப்பின்யார் ஆட்சிப்பொறுப்பை ஏற்பது என்னும் சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டான். முறைப்படி ஆட்சி அதிகாரத்திற்கு உரியவர்களாக முதலில் மாயாதுண்ணவும், அடுத்து புவனேகபாகுவன் இரண்டாம் மனைவியின் வழி பிறந்த இரண்டு ஆண் மக்களும், மருமகனும் உரியவர்களாயினும் புவனேகபாகு தனது பேரன் தர்மபாலாவிற்கே ஆட்சி அதிகாரத்தை அளிக்க முடிவு செய்தான். தர்மபாலா புவனேகபாகுவின் ஒரே

மகள் சமுத்திரதேவிக்கும் அவனது சகோதரியின் மகன் வீதிய பண்டாராவுக்கும் பிறந்தவன். கோட்டை அரசின் ஆட்சி அதிகாரத்தில் மாயாதுண்ண ஒரு போதும் அமராதவாறு மிக எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டுமென கோவா, கொழும்பு ஆகிய தளங்களிலுள்ள போர்த்துக்கேய அதிகாரிகள் 1539ஆம் ஆண்டிலேயே போர்த்துக்கால் மன்னனுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர்.[42] மாயாதுண்ண ஆரம்பமுதல் போர்த்துக்கேயரின் இலங்கைக்கான வருகையை மூர்க்கமான முறையில் எதிர்த்துவந்தான். இந்நிலையில் புவனேகபாகுவின் தெரிவாகிய தர்மபாலா உரிமை வாரிசு வரிசையில் பலமற்ற கோரிக்கையாகயிருப்பினும் போர்த்துக்கேயரும் இத்தெரிவையே விரும்பினர்.

புவனேகபாகு போர்த்துக்காலின் தலைநகர் விஸ்பனுக்கு அரசியல் தூதுவரை[43] அனுப்பி, இது விடயத்தில் போர்த்துக்கால் மன்னனின் உதவியைக் கோரலாம் என கொழும்பிலுள்ள போர்த்துக்கேய அதிகாரியும், பிரான்சிஸ்கன் சபைக்குருவும் ஆலோசனை வழங்கியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.[44] புவனேகபாகு தர்மபாலா தொடர்பான தனது தீர்மானத்தை போர்த்துக்கால் மன்னன் ஆதரிப்பதையம், அவனுக்குப் பாதுகாப்பு வழங்குவதையும் உறுதி செய்யும் பொருட்டு அரசியல் தூதுவன் மூலம் பொன்னினால் செய்யப்பட்ட தர்மபாலனின் முழு அளவிலான சிலையையும், மாணிக்கம் பதித்த பொன் முடியையும் போர்த்துக்காலுக்கு அனுப்பி, போர்த்துக்கால் மன்னன் தர்மபாலனின் சிலைக்கு முடி சூட்டும்படி கோரினான்.[45] புவனேகபாகுவின் கோரிக்கையை ஏற்று போர்த்துக்கால் மன்னனும் தர்மபாலாவின் சிலைக்கு முடி சூட்டி, தர்மபாலனுக்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்குமாறு கோவாலிலுள்ள தனது அதிகாரிக்குப் பணிப்புரை வழங்கினான்.[46]

மேலும், அரசியல் தூதுவன் கோட்டை அரசில் கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்கு சில மறைப்போதகர்களை (குருமாரை) அனுப்பும்படி புவனேகபாகு மன்னன் பெயரால், போர்த்துக்கால் மன்னனுக்கு வேண்டுகோள் விடுத்தான்.[47] போர்த்துக்கால் மன்னனின் ஆதரவைப் பெறுவதற்கு இவ்வாறான வேண்டுகோளை விடுப்பதே சிறந்த உபாயமெனக் கொழும்பிலுள்ள போர்த்துக்கேய அதிகாரியும், மறைபணியாற்றிய பிரான்சிஸ்கன் சபைக்குருவும் ஆலோசனை வழங்கியிருக்கலாம்.

ஸ்ரீ இராமராக்ச பண்டிற் (Sri Ramaraksa Pandit) அரசியல் தூதுவன் பங்குனி மாதம் 1543 ஆம் ஆண்டு கோவா

விஸ்பனிலிருந்து நோக்கிப் பயணமானான். புவனேகபாகு விடுத்த கோரிக்கையை மகிழ்வுடன் ஏற்ற போர்த்துக்கால் மன்னன் பிரான்சிஸ்கன் சபையைச் சார்ந்த யுவான் டீ வில்லா டீ கொண்டே என்னும் குருவின் தலைமையில் ஏனைய ஆறு குருக்களையும் அரசியல் தூதுவனுடன் இலங்கைக்கு அனுப்பினான்.[48] இவர்கள் 1543ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் கொழும்பை அடைந்தனர். மறைபரப்புப் பணியை மேற்கொள்ள வருகை தந்த குருக்களைப் புவனேகபாகு வரவேற்று புதிய மறையைத் தனது அரசில் போதிப்பதற்கு அனுமதி வழங்கினான்.[49] எனினும் அரசனோ, அவனது குடும்பமோ கிறிஸ்தவத்தைத் தழுவினால் மக்கள் மாயாதுண்ணவின் பக்கம் மாறிவிடுவார்கள் என அஞ்சி மன்னனும், அவனது குடும்பத்தினரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவ முற்றாக மறுத்து விட்டனர்.[50]

எனினும் கோட்டை மன்னனின் அரச தூதுவர்கள், போர்த்துக்காலில் தங்கியிருந்த வேளையில் புவனேகபாகுவின் பெயரால், அவனது மதமாற்றம் பற்றி உத்தியோகபூர்வமாக அளித்த வாக்குறுதியை போர்த்துக்கால் மன்னனின் அரசசபையும். பிரான்சிஸ்கன் குருமாரும் எடுத்துரைத்தனர்.[51]

மன்னன் மதம்மாறும் போது மக்களும் இலகுவில் மதத்திற்கு மாறிவிடுவர் என்னும் எதிர்பார்ப்புடன், மிக ஆர்வத்துடன் மறைபரப்புப் பணியை மேற்கொள்ள வந்த குருக்களுக்கு மன்னனின் மறுப்பு பெரும் ஏமாற்றத்தையே அளித்தது. எனினும் மறைபரப்புப் பணிக்காகவே இலங்கை வந்த பிரான்சிஸ்கன் சபைக்குருமார் பல சவால்கள், எதிர்ப்புக்கள் மத்தியிலும் மறைபரப்புப் பணியை மேற்கொண்டார்.

இதே வேளையில், மன்னன் புவனேகபாகு, போர்த்துக்கால் மன்னன் 3ஆம் யுவான் என்பவனுக்கு அனுப்பிய மடலில் கோட்டையில் தங்கியிருந்த போர்த்துக்கேயர், புதிய கிறிஸ்தவர்கள் நடத்தை பற்றித் தனது வெறுப்பையும், அதிருப்தியையும் எடுத்துரைத்தான். புதிதாக கிறிஸ்தவ மறையைத் தழுவியவர்கள் போர்த்துக்கேயரின் தூண்டுதலிலும், தவறான வழிநடத்தலிலும் நாட்டுச் சட்டங்களையும், விதிமுறைகளையும் மதியாமலும், கடைப்பிடிக்காமலும் வாழ்ந்தனர். குறிப்பாக, நாட்டு வரிகள், அரச பணிகள் போன்ற விடயங்களை மதியாது அலட்சியம் செய்தனர்.[52] அடிமைகள் விடுதலை பெறும் நோக்குடன் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர்.[53]

இவ்வாறாக போர்த்துக்கேயர் பற்றியும், புதிய கிறிஸ்தவர்கள் பற்றியும் புவனேகபாகு அனுப்பியிருந்த குற்றச்சாட்டுக்கள் பற்றியும் கேள்வியுற்ற போர்த்துக்கால் மன்னன் நாட்டுச்சட்டங்களும், விதிமுறைகளும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென இலங்கையிலுள்ள போர்த்துக்கேயருக்கும், புதிய கிறிஸ்தவர்களுக்கும் எழுத்து மூலம் அறிவுரை வழங்கினான்.[54]

இலங்கை வந்த பிரான்சிஸ்கன் சபைக்குருமாரும் மன்னன் புவனேகபாகு கிறிஸ்தவ மதத்தைத் தழுவவேண்டுமென வற்புறுத்திக் கொண்டிருந்தனர்.[55] ஏனெனில் மன்னன் மதம் மாறும் போது மக்களும் இலகுவில் அம்மதத்தை ஏற்றுக்கொள்வர் என்பது மதகுருமார் அனுபவத்தில் கண்ட உண்மையாகும். எவ்வளவு அழுத்தங்கள் அதிகரித்த போதும் மன்னன் புவனேகபாகு தாம் எந்த வேளையிலும் எவருக்கும் மதம் மாறுவதாக வாக்குறுதி அளிக்கவில்லையெனவும், எந்தவிதமான சலுகைக்காகவும் தனது முன்னோரின் மதத்தைக் கைவிடப் போவதில்லையெனவும் உறுதியாக எடுத்துரைத்தான்.[56] எனினும் போர்த்துக்கேயரைப் பகைத்துக்கொள்ளாமல் வந்த குருமாரை மரியாதையுடனும், கௌரவத்துடனும் வரவேற்று சாதுரியமாக நடந்து கொண்டான்.[57] தனது பேரன் தர்மபாலாவிற்கு கல்வி அளித்து, நெறிப்படுத்தும் பணியை பிரான்சிஸ்கன் சபைக்குருமாரிடம் கையளித்தான்.[58] நாட்டு சட்டங்களையும், ஒழுங்குகளையும் கடைப்பிடிக்கத்தவறிய புதிய கிறிஸ்தவர்களைத் தண்டித்ததோடு, தனது அரசின் மக்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுவதை மறைமுகமாகத் தடை செய்தான் எனக் கூறப்படுகின்றது.[59]

நிறைவுரை

போர்த்துக்கேயரின் இலங்கைக்கான வருகை தற்செயலாக இடம்பெற்றதோர் நிகழ்வானாலும் அது இலங்கை மக்களின் வாழ்வில் பாரிய மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்தது. எனினும், போர்த்துக்கேயர் இலங்கையில் தமது நிலையை வலுவாக நிறுவுவதற்கு இஸ்லாமியரிடமிருந்து பல சவால்களை எதிர் நோக்க வேண்டியிருந்தது. தமது நிலையை இலங்கையில் படிப்படியாக உறுதிப்படுத்திய போர்த்துக்கேயர் கோட்டை மன்னன் புவனேகபாகுவின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை அரசியலில் தலையிட்டனர். இத்தலையீடு நாட்டை ஆக்கிரமிக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது. இதன் காரணமாக போர்த்துக்கால் கலாச்சாரம் இலங்கை மக்களின் வாழ்வில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

அடிக்குறிப்புகள்

01. A.M. Mundadan, *History of Christianity in India,* Bangalore, 1989, P.245.
02. *Ibid,* P.243.
03. *Ibid,* P.244.
04. S.G. Perera, *A History of Ceylon: the Poutuguse and the Dutch Periods 1505-1796,* Colombo, Ceylon, 1955, P.06.
05. *Ibid,* P. 07.
06. *Ibid,* P. 09.
07. கலிக்கட் மன்னன் சாமோரின் என்றே அழைக்கப்பட்டான்
08. S.G. Perera, P.09.
09. டொம் மனுவல் 1 ஐப்பசி மாதம் 1495 முதல் மார்கழி மாதம் 1521 வரையும் போர்த்துக்கால் மன்னனாக ஆட்சி செய்தான்.
10. டொம் பிரான்சிஸ்கோ டீ அல்மெய்டா 1505 முதல் 1509 வரையும் போர்த்துக்கேய இந்தியக்குடியேற்றங்களுக்கு பதில் ஆளுனனாகப் பதவி வகித்தான். இவனது மகனே டொம் லொறன்ஸோ டீ அல்மெய்டா என்பவனாகும். இவனே இலங்கைக்கு முதன் முதல் படைக்குத் தலைமை தாங்கியவன்.
11. Diu என்பது குயராத் மானிலத்தின் குடாவின் தென்பகுதியிலுள்ள ஒரு நகரமாகும்.
12. S.G. Perera, P.09.
13. *Ibid,* P.10.
14. *Ibid,* P.10.
15. *Ibid,* P.12.
16. Queyros PP. 176-176, 181-182; படையின் ஆன்மகுரு விசன்ரி அடிகளிடம் ஆலோசனை கேட்டபோது அவர் மறுநாள் காலை திருப்பலி ஒப்புக் கொடுப்பதற்கு முன்பு பயணத்தைத் தொடர்வதா அல்லது பயணத்தை முடித்துக்கொண்டு இந்தியா திரும்பவா இறைவனின் திட்டம் என அறிந்து கொள்ள, இரண்டு துண்டுத்தாள்களில் எழுதிப் பூசைக்கல்லின் மீது வைத்து, திருப்பலியை

ஒப்புக்கொடுத்தார். திருப்பலியின் பின்பு இரண்டு தாள்களும் காணப்படவில்லை. இதனால் எந்தவொரு முடிவும் எடுக்காமல் கப்பல்களைக் காற்றுடனும், கடலுடனும் அடையவிடும்படி ஆலோசனை வழங்கினார்.

17. இலங்கைத் திருச்சபையின் வரலாற்றாசிரியர் குவைறோஸ் அவர்களின் கருத்துப்படி போர்த்துக்கேயர் இலங்கைக்கு முதலில் வருகை தந்தது 15ஆம் திகதி நவம்பர் மாதம் 1505 ஆம் ஆண்டிலாகும். வரலாற்றாசிரியர் பேகுசன்(D. Fergusan, The Discovery of Ceylon by the Portuguese in 1506, CB 1907, vol, ixx, No 59, PP,284-400)கருத்துப்படி 1506ஆம் ஆண்டிலேயே முதன்முதல் இலங்கைக்கு வந்தனர். வரலாற்றாசிரியர் பேணியோலா அவர்களின் கணிப்பின்படி 1505 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே போர்த்துக்கேயர் முதன்முதல் இலங்கைக்கு வந்தனர்: 1506 ஆம் ஆண்டு இரண்டாம் முறை வந்தபோதே கோட்டை மன்னனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டனர். VP, P.02

18. போர்த்துக்கேயர் முதன்முறை இலங்கைக்கு வந்தபோது வீரபராக்கிரமபாகு மன்னனே கோட்டை அரசின் உத்தியோக பூர்வமான அரசனாவான் (1483-1513). எனினும் இவன் மிகவும் முதிர்வயதை அடைந்திருந்த காரணத்தினால், இவனது மகன் தர்மபராக்கிரமபாகு ஆட்சி பொறுப்பை ஏற்றுச் செயற்பட்டான்.

19. S.G. Perera, P. 12.

20. *Ibid.*, P. 13.

21. 300 Lahars என்பது அண்ணளவாக 52,362 கிலோகிராம் நிறையாகும்.

22. *Ibid*, P. 14.

23. V. Perniola, *The Catholic Church in Sri Lanka, The Portuguese Period, Vol. I,1505-1565,* Tisara Prakasakayo Ltd., Dehiwala, 1989, p.03. Hereinafter, VPP I.

24. போர்த்துக்கேயர் இலக்கியச் சின்னம் செதுக்கப்பட்ட பாறை 1898 இல் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது இக்கல்லு ஜனாதிபதி மாளிகையிலுள்ள தோட்டத்தில் வைக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

25. VPP I, P. 03.

26. திருத்தந்தை 2ஆம் யூலியஸ் 1ம் திகதி கார்த்திகை மாதம் 1503 ஆம் முதல் 21 ஆம் திகதி மாசி மாதம் 1513 ஆம் ஆண்டு வரையும் திருச்சபையின் திருத்தந்தையாகப்

பணியாற்றியுள்ளார். கத்தோலிக்க திருச்சபையில் திருத்தந்தை என்பவர் ஆன்மீக, நிர்வாகத் தலைவராக பணியாற்றுகின்றனர். உரோமாபுரியின் ஆயரே திருத்தந்தை ஆவார்.

27. Edmund Pieris, *Studies Historical and Cultural,* PP 43-45; VPP I, P.04.
28. Tikiri Abeyasinghe, *Portuguese Rule in Ceylon, 1594-1612*, Lake House, Colombo, 1966, P. 09
29. S.G. Perera, *History of Ceylon*, P. 12.
30. போர்த்துக்கேயர் முதன் முதல் இலங்கைக்கு வந்தபோது கோட்டை அரசில் வீரபாராக்கிரமபாகு மன்னன் ஆட்சி செய்தான். எனினும் இவன் மிகவும் முதிர்வயதை அடைந்திருந்த காரணத்தினால் ஆட்சி தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளையும் இவனது மகன் தர்மபராக்கிரமபாகு செய்து வந்தான்.
31. VPP 1,P.06.
32. VPP1, P.06.
33. VPP 1, P.07.
34. கோட்டை அரசில் லோபோ டீ அப்பேக்காறியா(Lopo de Albergaria) என்பவனால் 1518ஆம் ஆண்டு கட்டப்பட்ட கோட்டை 1524இல் வாஸ்கொடகாமா (Vascodagama) என்பவனால் கட்டளையிடப்பட்டு அழிக்கப்பட்டது.
35. Tikiri Abeyasinghe, P.09.
36. Martin Quere, P.11
37. *Ibid,* P.12
38. *Ibid.,*
39. *Ibid.,*
40. Tikiri Abeyasinghe, P.10.
41. Martin Quere, P.13
42. புவனேகபாகு அனுப்பிய அரசியல் தூதுக்குருவிற்கு ஸ்ரீ இராமராக்ச பண்டித்த என்பவனே தலைமை தாங்கினான். இவன் கோவா புனித பவுல் இறையியல் கல்லூரியில் 1556ஆம் ஆண்டு திருமுழுக்குப்பெற்று, டொம் அல்பொன்சோ டீ நொறோண்ணா என்னும் பெயரைப் பெற்றுக்கொண்டான்.
43. Martin Quere, P.13
44. VPP 1,p. 21-23.
45. VPP I, P.24-26.

46. VPP I, P.23
47. VPP 1, P.38
48. Ibid.,
49. Martin Queue, P.15; VPP1, P.40.
50. VPP 1, PP.38-42.
51. போர்த்துக்கால் மன்னன் இது விடயம் தொடர்பாக1543ஆம் ஆண்டு 13ஆம் திகதி 10 அறிக்கைகளை வெளியிட்டான். VPP 1, PP.24-34.
52. VPP 1, P.17.
53. O.M.da Silva Cosme, Sri Lanka and the Portuguese, 1986, PP.25-25. This book by O.M. da Silva Cosme contains translations of historical Portuguese documents relating to the Period 1541to 1557.
54. இலங்கையில் பூர்வகாலம் முதல் அடிமைகள் சமூகத்தின் ஒரு தொகுதியினராகக் கணிப்பிட்டு வந்துள்ளார்கள். யார் இந்த அடிமைகள் தங்களைத் தாங்கள் பராமரிக்க முடியாத நிலையிலுள்ளபோது அல்லது செய்த் பெரிய குற்றத்திற்குத் தண்டிக்கப்படும் போது, அல்லது போரில் கைதுசெய்யப்படும் போது, இவர்கள் அடிமைகளாகின்றனர். இவர்கள் விற்கப்படலாம், வாங்கப்படலாம் ஆனால் இவர்களது சமூக சாதி நிலை மாறாதிருக்கும். இவர்கள் தங்களைத் தாங்களே மீட்டுக்கொள்ளலாம் அல்லது வேறொருவரால் மீட்டுக்கொள்ளப்படலாம;. VPP 1, P.17.
55. VPP 1, PP.38-44.
56. புவனேகபாகு தான் திருமுழுக்குப் பெறுவதாக எந்த வேளையிலும் எவருக்கும் வாக்களிக்கவில்லை என்னும் நிலைப்பாட்டை எப்பொழுதும் வலியுறுத்தி வந்தான்.
57. VPP 1, P.23,:
58. VPP 1, P.38.
59. குறைறோஸ் கருத்துப்படி புவனேகபாகு, தர்மபாலாவிற்கு கல்வி அளிக்கும் பொறுப்பை பிரான்சிஸ்கன் சபைக் குரு யுவான் டி வில்லா கொன்சடேயிடம் கையளித்தான். டொன் பீற்றர் அடிகளும் இதே கருத்தை ஆதரிக்கின்றார். எனினும் போனரியோவா அடிகளின் கருத்துப்படி தர்மபாலாவின் கல்விக்கு பிரான்சிஸ்கன் சபைக் குரு யுவான் டி வில்லா டி கொன்சடே பொறுப்பாக இருந்தார் என்பதற்கு எந்தவிதமான ஆவண ஆதாரமுமில்லை எனக் கூறுகின்றார், VPP 1, PP.36-46.

Bibliography

01. Mundadan. A. M, *History of Christianity in India*, Bangalore, 1989.

02. Perera. S. G, *A History of Ceylon: the Poutuguse and the Dutch Periods 1505-1796*, Colombo, Ceylon, 1955.

03. Edmand Pieris, *Studies- Historial and Cultural, Catholic* press, Colmbo, 1978.

04. Tikiri Abeyasinghe, *Portuguese rule in Ceylon, 1594-1612*, Lake House, Colombo, 1966.

05. Ribeiro Joal, *History of Ceilao*-translated into English by P.E. Pieris, Colombo, 1909.

06. O.M.da Silva Cosme, *Sri Lanka and the Portuguese*, Colombo, 1967. This book by O.M. da Silva Cosme contains translations of historical Portuguese documents relating to the Period 1541to 1557.

07. V. Perniola, *The Catholic Church in Sri Lanka, The Portuguese Period, Vol. I,1505-1565,* Tisara Prakasakayo Ltd., Dehiwala, 1989

ISBN: 978-955-96653-5-9